






# அரங்கம்

## என் பணி அரன் துதி

மறைக்குள்ளும் அடக்க முடியா இறைவன் ஈசனின் இயல்புகளையும் பெருமைகளையும் மரபுக் கவிதைக்குள் தந்து நம்மை மயக்கியுள்ளார் கவிதாயினி தா.வெ.தங்கமணி அவர்கள். இணையதளத்தில் தரப்பட்ட ஈற்றடிகளுக்காக எழுதப்பட்டது போல் இல்லாமல் இயல்பாய் எழுதப்பட்டது போல் அமைந்துள்ளன. இத்தகைய நூலைக் கொண்டுவந்துள்ள ஆசிரியரையும் வெளியீட்டாளரையும் நிச்சயம் பாராட்ட வேண்டும். ஈசனை விரும்புவோரும், மரபை மதிப்போரும் ஆசையுடன் படிக்கலாம்.

**விலை ரூ.150/- பக்கங்கள்: 106, வெளியீடு:**
Immortal Dooh Publications,
D-23, Shivlok Colony, Raipur Road, P.O. Roipur,
Dehradam - 248008. Phone: 91-9456170580.

## மதுரை மணி அய்யர்

மதுரை மணி ஐய்யர் சங்கீத கலாநிதி உள்ளிட்ட பற்பல விருதுகளைப் பெற்றவர். பாமரனும் விரும்பிக் கேட்கும்படி தன் குரல் வளத்தால் பலச் சாதனைகள் புரிந்த மதுரை மணி அய்யரின் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில் ஹெரிடேஜ் பப்ளிகேஷன்ஸ் இப்படக்கதை நூலைக் கொண்டுவந்துள்ளது. இந்நூல் சங்கீதம் பயிலும் சிறார்களுக்கு பெரும் ஊக்கத்தைத் தரும். மணி அய்யரின் வாழ்வினைச் சித்தரிக்கும் இப்படக்கதை நூலில் முக்கிய நிகழ்வுகளுக்கு நிழல்படத்தை இணைத்திருப்பது மிகச் சிறப்பாக உள்ளது.

**விலை ரூ:125/- பக்கங்கள்: 24, வெளியீடு:**
**ஹெரிடேஜ் பப்ளிஸிஸ் ஹவுஸ்,**
**69/1, சேமியர்ஸ் ரோடு, சென்னை - 28.**

## ஸரஸ்வதி (Echanting Sarasvathi)

ஆன்மிக இசைத் தட்டுகளை வெளியிட்டுவரும் ''கிரி'' நிறுவனத்தின் புதிய வெளியீடு இவ்விசைத்தட்டு. பற்பல தெய்வங்களை வேண்டிப் பெறும் நலன்கள் அனைத்தையும் ஸரஸ்வதியைப் போற்றுவதாலேயே கிடைத்துவிடும். கலைகளின் அதிபதியான ஸரஸ்வதியின் பெருமைகளையும் 'ரூபத்தினையும் போற்றும் ஏழு பாடல்களைக் கொண்டுள்ளது இவ்விசைத்தட்டு. அனைத்துப் பாடல்களையும் டெல்லி ஐஸ்வர்யா மிகத்துல்லியமான உச்சரிப்புடனும், இனிமையுடனும் பாடியுள்ளார். பல இசைத்தட்டுகளைப் பாடியும், இசையமைத்தும் வெளியிட்டுள்ள டி.எஸ். ரங்கநாதனும் துணையாகப் பாடியுள்ளார். பாடல்களுக்கான இசை சேர்ப்பினை மேற்கத்திய இசைக் கருவிகளின் கலப்புடன் மனம்கவரும் வகையில் ஆர்.என்.ரங்கனாதன் செய்துள்ளார்.

**வெளியீடு: கிரி டிரேடிங் கம்பெனி, புதிய எண்:**
**134, டி.எஸ்.வி. கோயில் தெரு, மயிலாப்பூர்,**
**சென்னை - 4. விலை ரூ.195/-**

**தி. கோவிந்தராஜ்**